தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புரட்டாசி 10, பார்த்திப – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 செப்டம்பர் 26, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"

விடா முயற்சியும், நிறைந்த அறிவும் என்ற இரண்டினையும் கொண்டு ஒய்வில்லாமல் ஒருவர் செய்கின்ற செயலால் அவரது குடியானது உயர்வடையும்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா எண்கள் 41 மற்றும் 42, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா எண் 43, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

43—

நீதிமன்றம்

***19435—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்தில் ஒரு நீதிமன்றம் நடப்பாண்டில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 44, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

44—

மென்பொருள் பூங்கா

***71510—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகரில் மென்பொருள் பூங்கா தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகம் தகவல் தொழில்நுட்பப் புரட்சியிலே இந்தியாவிலே முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே சென்னையிலே மட்டும் அதனுடைய வளர்ச்சி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு நகரங்களிலே வளர்ச்சி வருகின்ற வகையிலே இதுபோன்ற மென்பொருள் பூங்காக்களை, திருவண்ணாமலை போன்ற நகரங்களிலேயும் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*